**இலங்கை கணக்கீட்டுத் தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

**AA1 பரீட்சை – 2017 யூலை**

# (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

---

*பெரும்பாலான பரீட்சார்த்திகள் வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல் வினாப் பத்திரத்திற்கு திருப்திகரமான வகையில் விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், ஒட்டுமொத்தத்தில் சில வினாக்களுக்காக அதிகளவான பரீட்சார்த்திகள் வழங்கிய விடைகளில் சில குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. இது தொடர்பில் புள்ளியிடும் பரீட்சகர்களால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன:*

## பகுதி A

நோக்கச் நோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01** – இவ்வினா 40 புள்ளிகளுக்காக 20 கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.

மொத்தப் புள்ளிகளில் 40% ஆனவை இவ்வினாவுக்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இது பாடத்திட்டத்தின் பெரும்பாலான பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. இது அடிப்படைப் பொருளியல் கோட்பாடுகள் மற்றும் எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டு, பாடத்திட்டத்துடன் தொடர்புடைய விடயங்களில் சரியான அளவுகளைப் (weight) பேணியவாறு தயாரிக்கப்பட்டிருந்தது. வினா இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களில் சரியான விடையைத் தெரிவுசெய்யுமாறு கேட்கப்பட்டிருந்ததுடன், இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் சரியானதா அல்லது தவறானதா எனக் கூறுமாறு கேட்கப்பட்ட அதேவேளை இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களில் தரப்பட்ட இரு விடைகளில் சரியானதைத் தெரிவுசெய்யுமாறும் கேட்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்ததுடன் நியாயமான அளவு புள்ளிகளையும் பெற்றிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், இப்பகுதிக்கான சில வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகளில் சொற்பளவிலான குறைபாடுகளும் காணப்பட்டன.

விடைகளில் காணப்பட்ட பொதுவான குறைபாடுகள் / வழுக்கள் பின்வருமாறு;

**1.1** இவ்வினாவின் நோக்கம் ‘‘நுண்பாகப் பொருளியலின்’’ எண்ணக்கரு மீதான அறிவையும் விழிப்புணர்வையும் அளவிடுவதாக இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்திருந்தனர்.

**1.2** இவ்வினா ‘‘உற்பத்திச் சாத்திய வளையியின்’’ அடிப்படைப் பொருளியல் எண்ணக்கருக்களில் ஒன்றான எடுகோள்கள் பற்றிய விழிப்புணர்வை அளவிடுவதாக இருந்தது. இங்கு அளிக்கப்பட்ட அதிகளவான விடைகள் சரியானதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**1.3** இவ்வினாவின் நோக்கம் உற்பத்தியாளர் மிகை மற்றும் நுகர்வோர் மிகை ஆகியவை தொடர்பான எண்ணக்கருக்கள் பற்றிய விழிப்புணர்வு மட்டத்தை அளவிடுவதாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனராயினும், தவறான விடைகளும் காணப்பட்டன. கோட்பாட்டு ரீதியான விளக்கமின்மை மற்றும் கேத்திரகணிதக் கணிப்பீடுகளில் காணப்பட்ட பலவீனம் ஆகியவை அளிக்கப்பட்ட தவறான விடைகளுக்கான காரணங்களாக இருந்தன.

**1.4** இது பயன் எண்ணக்கரு பற்றிய அறிவு மட்டத்தை அளவிடுவதற்கான ஒரு இலகுவான வினாவாக இருந்தது. இவ்வினாவை அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக எதிர்கொண்டிருந்தனர்.

**1.5** இங்கு கிரய எண்ணக்கரு மீதான கோட்பாட்டு அறிவு பரீட்சிக்கப்பட்டிருந்தது. இதற்கு சரியான விடைகள் வழங்கப்பட்டிருந்த அதேவேளை எண்ணக்கரு தொடர்பான அறிவு காணப்படாமை காரணமாக பிழையான விடைகளும் வழங்கப்பட்டிருந்தன.

**1.6** இவ்வினா அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச விலை எண்ணக்கரு தொடர்பான அறிவை அளவிடுவதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்தது. பரீட்சார்த்திகள் அந்த எண்ணக்கரு தொடர்பில் போதிய அறிவைக் கொண்டிராத காரணத்தால் பிழையான விடைகளைத் தெரிவு செய்திருந்தனர்.

**1.7** இவ்வினாவின் பிரதான நோக்கம் பணவீக்க வீதத்தைக் கணிப்பிடும் திறனை பரீட்சிப்பதாக இருந்தது. அதிகளவான விடைகள் பிழையானதாகக் காணப்பட்டன. இதற்கான பிரதான காரணமாக கணிதத் திறன் குறைபாடு இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**1.8** இது பரீட்சார்த்திகளின் நடைமுறை அறிவினை அளவிடுவதாக இருந்தது. அதிகளவான விடைகள் வெற்றிகரமாக அமைந்திருக்கவில்லை. இதற்கான காரணமாக மத்திய வங்கி அறிக்கைகள் போன்ற பாடத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்களை பயன்படுத்துவதில் உள்ள குறைபாடே காணப்படுகிறது.

**1.9** இவ்வினா சென்மதி நிலுவை தொடர்பான அடிப்படை அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான விடைகள் பிழையானதாக இருந்தன. அதற்கிணங்க, பரீட்சார்த்திகளிடம் வரையறுக்கப்பட்ட பாட அறிவு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**1.10** பொருளாதார மாதிரிகள் மீதான விழிப்புணர்வை அளவிடுவதே இவ்வினாவின் நோக்கமாக இருந்தது. அதிகளவான விடைகள் வெற்றிகரமாக அளிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் சில பரீட்சார்த்திகளிடம் பொருளாதார மாதிரிகள் பற்றிய தெளிவின்மை காணப்பட்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**1.11 - 1.15**

இங்கு தரப்பட்ட கூற்றுக்கள் சரியானவையா அல்லது பிழையானவையா என்பதை அடையாளம் காணுமாறு கேட்கப்பட்டிருந்தது. ஒட்டுமொத்தத்தில், இவ்வினாவுக்கான விடையளிப்பு வெற்றிகரமாக இருந்தது. சகல ஐந்து வினாக்களிலும், அதிகளவான பரீட்சார்த்திகள் வினா இல. 1.12 இற்கே பிழையான விடையினைத் தெரிவு செய்திருந்தனர். இந்தக் குறிப்பிட்ட வினா வரிச் சுமையின் மீளும் தன்மை மற்றும் பரம்பல் தொடர்பான எண்ணக்கருவை பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. பரீட்சார்த்திகள் விடையளிக்கும்போது எண்ணக்கரு பற்றிச் சரியாக விளங்கிக்கொள்ளாது குழம்பியிருந்தனர்.

**1.16 - 1.20**

இங்கு தரப்பட்ட இரண்டு விடைகளில் சரியானதைத் தெரிவுசெய்யுமாறு கேட்கப்பட்டிருந்தது. வினா இல. 1.16 இற்கு அதிகளவான பரீட்சார்த்திகள் பிழையான விடையைத் தெரிவுசெய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. பயன் எண்ணக்கரு மீதான கோட்பாட்டு அறிவு மற்றும் விழிப்புணர்வைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. பரீட்சார்த்திகள் மத்தியில் காணப்பட்ட போதிய அறிவின்மையே இவ்வினாவுக்கு பிழையான விடையைத் தெரிவுசெய்யப் பிரதான காரணமாக அமைந்திருக்கிறது.

## பகுதி B

இப்பகுதி ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட 4 வினாக்களைக் கொண்டுள்ளது.

### வினா இல. 02

**(a)** இவ்வினா பொருளாதாரமற்ற வளங்களுக்கான உதாரணங்களுடன் வளங்கள் பற்றிய அடிப்படைப் பொருளாதார எண்ணக்கரு மீதான அறிவை அளவிடுவதற்காக அமைக்கப் பட்டிருந்தது. பொருளாதார வளங்கள் பற்றி சரியானவாறு விபரித்து இதற்குரிய 3 புள்ளிகளையும் பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அதிகளவில் காணப்பட்டது. இங்கு பொருளாதாரமற்ற வளங்களின் பண்புகள் சரியாக குறிப்பிடப்பட்டிருந்தன. அதாவது எவருக்கும் உரிமை இல்லாதது, அரிதான தன்மை அற்றது மற்றும் சந்தர்ப்பச் செலவு அற்றது என்பவற்றை உதாரணங்களான காற்று மற்றும் சூரிய ஒளி ஆகியவற்றுடன் குறிப்பிட்டிருந்தனர். இருந்த போதிலும், இங்கு அதிகளவான பரீட்சார்த்திகள் உதாரணங்களுக்கான புள்ளிகளை மாத்திரமே பெற்றிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. பரீட்சார்த்திகள் பொருளாதாரமற்ற வளங்களின் சகல பண்புகளையும் எழுதுவதற்குத் தவறியிருந்தனர். இவ்வினா இலகுவான ஒரு வினாவாக இருந்தபோதிலும், சில பரீட்சார்த்திகள் ''பொருளாதாரமற்ற'' என்னும் பதத்தினைச் சரியானவாறு விளங்கிக்கொண்டிருக்கவில்லை.

**(b)** இங்கு தரப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விலை நெகிழ்ச்சி கணிப்பீட்டுடன் கேள்வியின் நெகிழ்ச்சி எண்ணக்கரு மீதான அறிவு பரீசிக்கப்பட்டிருந்தது. இவ்வினா அதிகளவான பரீட்சார்த்திகள் குறைந்தளவுப் புள்ளிகளைப் பெற்ற ஒரு வினாவாகும். இதற்குக் காரணமாக இருப்பது கேள்வியின் நெகிழ்ச்சியை கணிப்பிடுவது தொடர்பில் வரையறுக்கப்பட்ட அறிவு காணப்பட்டமையே என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், விலையானது ரூ.10/- இலிருந்து ரூ.9/- இற்கு குறைவடையும்போதான கேள்வியின் நெகிழ்ச்சியைப் பரீட்சார்த்திகள் வெற்றிகரமாகக் கணிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வினாவைக் குறிப்பீடு செய்யத் தவறியிருந்தனர். அவர்கள் புள்ளி B இல் -2.05 ஆக கேள்வியின் நெகிழ்ச்சிக் கணிப்பீடு தொடர்பில் தெளிவின்மையுடன் இருந்ததைத் காணக்கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் சமன்பாட்டை மாத்திரம் குறிப்பிட்டிருந்தனர். அதனை தீர்த்திருக்கவில்லை. அதிகளவான பரீட்சார்த்திகள் சுய கற்றல் புத்தகத்தைச் சரியானவாறு படித்திருக்கவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**(c)** இவ்வினாவில் சந்தைக் கட்டமைப்பு பற்றிய அறிவும் விழிப்புணர்வும் பரீட்சிக்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சந்தைக் கட்டமைப்புகளுக்கிடையிலான வேறுபாடுகளை சரியாக ஒப்பிட்டிருந்தனர். பெரும்பாலானவர்கள் நிறைபோட்டி மற்றும் தனியுரிமைச் சந்தை ஆகியவற்றுக்கிடையிலான 04 வேறுபாடுகளை வெற்றிகரமாகக் குறிப்பிட்டு மொத்தப் புள்ளியான 04 புள்ளிகளையும் பெற்றிருந்தனர். இருந்தபோதிலும், ஒரு சில பரீட்சார்த்திகள் நிறைபோட்டி பற்றிய தெளிவான விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்பது புலப்பட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் தனியுரிமை மற்றும் தனியுரிமைப் போட்டி ஆகிய இரண்டையும் குழப்பியடித் திருந்தனர். பரீட்சார்த்திகள் சந்தைக் கட்டமைப்புகளின் வேறுபாட்டைச் சரியானவாறு கற்றிருப்பின் அவர்களால் அதிக புள்ளிகளைக் பெற்றிருக்க முடியும்.

எவ்வாறாயினும், தொடர்புடைய ஒப்பீட்டைச் செய்வதற்குப் பதிலாக சந்தையின் பண்புகளைக் குறிப்பிட்டிருந்தமை அவதானிக்கப்பட்ட பொதுவான தவறாகக் காணப்பட்டது. மேலும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் நீளமான விடைகளையும் வழங்கியிருந்தனர்.

**வினா இல. 03**

**(a)** (i) இங்கு தரப்பட்ட கூற்றுடன் பரீட்சார்த்தி இணங்குகிறாரா அல்லது இணங்கவில்லையா என்பதைக் கூற எதிர்பார்க்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் ''இணங்குகிறேன்'' என்ற சரியான விடையை அளித்திருந்தனர். எவ்வாறாயினும், சொற்பளவிலான பரீட்சார்த்திகள் இக்கூற்றுடன் ''இணங்கவில்லை'' எனக் குறிப்பிட்டிருந்தனர்.

(ii) பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் வருவித்த கேள்வி என்பது தொடர்பான கருத்தியல் சார்ந்த அறிவைக் கொண்டிருக்காமை அவர்களால் வழங்கப்பட்ட நீளமான விடைகளின் மூலம் தெளிவாகியது.

**(b)** அளவுத்திட்ட விளைவுகள் பற்றிய இவ்வினாவுக்கு ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியாக விடையளித்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் அளவுத்திட்ட விளைவுகளின் சரியான வகைப்படுத்தல்களை எழுதியிருந்த போதிலும், அவர்களில் பலர் அதனைச் சரியாக விபரித்திருக்கவில்லை. உற்பத்திக் கோட்பாடு பற்றிய அறிவைப் பரீட்சிப்பதில் இவ்வினா பிரதான கவனம் செலுத்தியிருந்தது. குறுங்கால ஓட்டம் மற்றும் நீண்ட கால ஓட்டம் பற்றிய பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்த விழிப்புணர்வு போதியதாக இல்லை என்பது அவதானிக்கப் பட்டது.

சரியான விடைக்குப் பதிலாக அதாவது, நிலையான, அதிகரிக்கும் மற்றும் குறைவடையும் அளவுத்திட்ட விளைவு போன்றவற்றிற்குப் பதிலாக சில பரீட்சார்த்திகள் பெரிய அளவுத்திட்டம், இடைமட்ட அளவுத்திட்டம் மற்றும் சிறிய அளவுத்திட்டம் அல்லது அதிகரிக்கும் மற்றும் குறையும் சந்தர்ப்பச் செலவு என்றவாறு குறிப்பிட்டிருந்தனர். இதற்கிணங்க, சில பரீட்சார்த்திகள் அளவுத்திட்ட விளைவு தொடர்பான பாட விடயங்களை கற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கத்தக்கதாக இருந்தது.

**வினா இல. 04**

**(a)** (i) அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில விடைகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன:

- பணத்தின் பண்புகளுக்குப் பதிலாக பணத்தின் பயன்பாடு பட்டியலிடப்பட்டிருந்தது.
- பணத்தாள் ஒன்றின் முகப்பின் பண்புகள் தரப்பட்டிருந்தன.

உதாரணம் : மத்திய வங்கி ஆளுநரால் கையொப்பமிடப்பட்டிருத்தல்
தாளில் வெள்ளிக் கோடொன்று உள்ளிடப்பட்டிருத்தல்

இது பணம் என்னும் எண்ணக்கரு தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு, விழிப்புணர்வு என்பன போதியதாக இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது. இதேபோன்று, சில பரீட்சார்த்திகள் நீர்மக்குறியீடு, வெள்ளிக் கோடு, மற்றும் மத்திய வங்கி ஆளுநரினதும் நிதி அமைச்சரதும் அங்கீகாரம் என்பன போன்ற விசேட அம்சங்களை எடுத்துக் காட்டி, விபரித்து தவறான விடைகளை வழங்கியிருந்தனர்.

(ii) பணத்திற்கான கேள்வி பற்றி மிகச் சில பரீட்சார்த்திகளே சரியாக பொருள் வரையறை செய்திருந்தனர். மேலும், பணத்திற்கான கேள்வி ஒன்றை உருவாக்கும் காரணங்கள் அதாவது, கொடுக்கல் - வாங்கல்கள் / பாதுகாப்பு / ஊக வணிகம் என்பனவும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளால் குறிப்பிடப்பட்டிருந்தன. பணத்திற்கான

கேள்வி என்பதை பணத்திற்கான அகற்றல் தன்மையாக பிழையாக விளங்கிக் கொண்டிருந்த குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். இந்த எண்ணக்கரு தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவு மட்டம் மற்றும் விளங்கிக்கொண்ட தன்மை ஆகியன குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**(b)** பரீட்சார்த்திகளில் பெரும்பாலானவர்கள் இலங்கை மத்திய வங்கியின் மூன்று பிரதான தொழிற் பாடுகளை பரீட்சித்திருந்த இவ்வினாவுக்கு திருப்திகரமான பதில்களை வழங்கியிருந்தனர். பண விநியோகம் என்பது பொதுவான விடைகளில் ஒன்றாக இருந்தது. வங்கியியல் முறைமை தொடர்பில் விழிப்புணர்வு இன்மை காரணமாக பரீட்சார்த்திகளின் விடைகளுக்கு இடையே கீழுள்ளவாறான தவறான விடைகளையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

- பொதுமக்களுக்கு கடன்களை வழங்குதல்
- வங்கி மேலதிகப்பற்று வசதிகளை வழங்குதல்
- பொதுமக்கள் சார்பாக கணக்குகளைப் பராமரித்தலும் ஆலோசனை சேவைகளை வழங்குதலும்

**வினா இல. 05**

(a) பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் தமது விடைகளை வரைபுகளைப் பயன்படுத்தி இசைவுபடுத்தியிருந்தனர். எவ்வாறாயினும், தவறான விடைகளுக்கான பிரதான காரணமாக இருப்பது அதிகபட்ச விலை மற்றும் குறைந்தபட்ச விலைகளை சரியாக வேறுபடுத்தியிருக்காமையே ஆகும்.

உதாரணம் : பரீட்சார்த்திகள் தவறு விட்டிருந்த சந்தர்ப்பங்களுக்கான சில உதாரணங்கள் பின்வருமாறு:

- சமநிலை விலைக்குக் கீழ் உயர்ந்தபட்ச விலை நிலையாக இருக்கிறது என வினாவில் தரப்பட்டிருந்த போதிலும், சமநிலை விலைக்கு மேல் உயர்ந்த விலை நிலையாக இருக்கிறது என பரீட்சார்த்திகள் விளங்கியிருந்த சந்தர்ப்பங்களை காணக்கூடியதாக இருந்தது.
- இது உற்பத்தியாளருக்கு நன்மையானது எனக் குறிப்பிட்டிருந்தமை
- பண்டத்தின் விலை அதிகரிக்கிறது எனக் குறிப்பிட்டிருந்தமை

(b) இவ்வினாவுக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் முழுமையான விடையினை அளிக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இது பரீட்சார்த்திகள் பாதுகாப்புவாதம் என்ற எண்ணக்கரு பற்றிய சரியான விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. எனவே, சம்பந்தமற்ற விடைகளே இங்கு அதிக அளவில் காணப்பட்டன. அவற்றுள் சில பின்வருமாறு;

உதாரணம் :

- நாட்டிற்கான வெளிநாட்டு நாணயப் பாய்வுகள்
- சர்வதேச ஒத்துழைப்பு உயர்வடைதல்
- ஏற்றுமதிகளின் ஊக்குவிப்பு

பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு மிகக் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

## பகுதி C

**வினா இல. 06** – இது 20 புள்ளிகளுக்கான ஒரு கட்டாய வினாவாகும்.

**(A) (a)** பெரும்பாலான பரீட்சார்த்திகளுக்கு பின்வரும் மூன்று பிரதான பொருளாதார முறைமை களையும் சரியாகப் பெயரிடுவதற்கு இயலுமாக இருந்தது.

(i) சந்தைப் பொருளாதாரம்

(ii) திட்டமிட்ட பொருளாதாரம்

(iii) கலப்புப் பொருளாதாரம்

எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் கீழேயுள்ளவாறு பிழையான விடைகளையும் குறிப்பிட்டிருந்தனர்.

(i) மரபார்ந்த பொருளாதார முறைமை

(ii) பெரும்பாகப் பொருளாதார முறைமை

(iii) திறந்த பொருளாதார முறைமை

(iv) நிலப்பிரபுத்துவ பொருளாதார முறைமை

**(b)** கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்திருந்தனர். பொருளியல் பற்றிக் கற்கும் சகல மாணவர்களும் இந்த எண்ணக்கருக்கள் தொடர்பான தெளிவானதொரு விளக்கத்தைக் கொண்டிருப்பது முக்கிய மானதாகும். பல பரீட்சார்த்திகள் வினாவை முழுமையாக விளங்கிக்கொண்டிருக்க வில்லை. இதன் விளைவாக அவர்களுக்கு சரியான விடை தெரிந்திருந்தும்கூட அவர்களால் முழுப் புள்ளிகளையும் பெற முடியாமற் போயிருந்தது.

அவதானிக்கப்பட்ட சில பொதுவான பலவீனங்கள் பின்வருமாறு:

(i) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை சரியாகச் சமர்ப்பிக்காமை.

(ii) குறிப்பிட்ட பொருளாதார முறைமை ஒன்றின் மூலம் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் முறையியலை விபரிப்பதற்குப் பதிலாக, ஒவ்வொரு பொருளாதார முறைமையினாலும் அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீளமான விபரிப்புகள் தரப்பட்டிருந்தன. இது அதிக நேரத்தைச் செலவிட வழிவகுத் திருந்தது.

(iii) பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறையினை விபரிக்காது, பொதுவான பொருளாதார முறைமைகளால் பிரச்சினைகளைத் தீர்க்கும் முறை களைப் பரீட்சார்த்திகள் விபரித்திருந்தனர்.

(iv) மேலும், பொருளாதாரப் பிரச்சினைகள் தவறான வழிகளில் தீர்வுசெய்யப் பட்டிருந்தன.

(v) மூன்று அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் மாத்திரம் அடையாளம் காணப் பட்டிருந்தன.

**(B)** ''தேசிய கணக்கீடு'' பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்த இவ்வினாவுக்கான முழுப் புள்ளி களையும் மிகச் சில பரீட்சார்த்திகளே பெற்றிருந்தனர்.

**(a)** பல பரீட்சார்த்திகள் இப்பகுதிக்குச் சரியான விடையினை வழங்கியிருந்தனர். எவ்வாறா யினும், சில பரீட்சார்த்திகள் கணிப்பீட்டு வழுக்கள் (கூட்டுத்தொகை) காரணமாக முழுப் புள்ளிகளையும் இழந்திருந்தனர்.

**(b)** பரீட்சார்த்திகளின் குறைவான செயலாற்றுகைக்கான பிரதான காரணம் நிகர நேரில் வரியை கணிப்பீடு செய்வதற்குப் போதியளவு திறன்களை அவர்கள் கொண்டிருக் காமையே ஆகும். மேலும், பின்வரும் தவறுகளும் அடையாளங் காணப்பட்டிருந்தன.

(i) கொடைகளும் நேரில் வரிகளும் ஒன்றுடனொன்று கூட்டப்பட்டிருத்தல்

(ii) நேரில் வரி – கொடை இற்குப் பதிலாக, கொடை – நேரில் வரி எனக் குறிப்பிட்டு கணிப்பீடு செய்யப்பட்டிருத்தல்

(iii) மொத்தக் காரணிக் கிரயத்திற்காக நேரில் வரியை அல்லது கொடையை மாத்திரம் சேர்த்திருத்தல்

**(C)** அதிகளவான பரீட்சார்த்திகள் மொத்தத் தேசிய உற்பத்தியைச் சரியாக கணிப்பிட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் GDP சமன்பாட்டைப் பிழையாக எழுதியிருந்தனர். அத்துடன் சில பரீட்சார்த்திகளுக்கு சமன்பாடு தெரிந்திருக்கவில்லை. மேலும், கணிப்பீட்டு வழுக்கள்கூட பொதுவாகக் காணப்பட்டன. எவ்வாறாயினும், கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரம் சரியாக விடையளித்திருந்தனர்.

\- - -

**பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள் :**

1. பாடத்திட்டத்தை முழுமையாகக் கற்றுத் தெளிவதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தையும் செலுத்தவும்.
2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.
3. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.
4. விசேடமாகச் சுய கற்றல் புத்தகங்கள், புத்தகங்கள், கையேடுகள், கடிதங்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி வருடாந்த அறிக்கைகள் மற்றும் பாடத்துடன் தொடர்புபட்ட ஏனையவைகளை கற்கவும்.
5. வரைபடங்களைச் சரியாகப் பெயரிட்டு விபரிக்கவும்.
6. விடையெழுதும்போது அடிப்படை கோட்பாட்டுரீதியான எண்ணக்கருக்களைச் சரியாக இனங் காணப்தற்கும் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களைக் கட்டியெழுப்பவும்.
7. கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் உரிய இடங்களில் ஏற்றவாறு இடப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
8. வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.
9. கடந்தகால வினாப்பத்திரங்களையும் விடைகளையும் கற்பதன் மூலம் உங்களது அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.
10. பொருளியல் கோட்பாடுகளைச் சரியாக விளங்கிக்கொள்வதன் மூலம் அதனுடன் தொடர்புடை யவைகளுக்கு இடையிலான வேறுபாடுகளைக் கட்டமைப்பதற்கு இயலுமாக இருத்தல் வேண்டும்.
11. நேர முகாமைத்துவம் முக்கியமானது.
12. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் சரியான இடங்களில் எழுதப் பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.
13. முன்னாயத்தத்துடனும் இயலுமான புள்ளிகளைப் பெறுகின்ற எதிர்பார்ப்பிலும் பரீட்சைக்குத் தோற்றவும்.

\- * * * -